ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ கண்ணனென்னும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணனென்னும் ॥

கண்ணன் உகந்த பொருள்கொண்டு காதல்நோய் தணிமின் எனல்

‡கண்ணன் என்னும் கருந்தெய்வம்⋆
காட்சிப் பழகிக் கிடப்பேனை⋆
புண்ணில் புளிப் பெய்தாற் போலப்⋆
புறம் நின்றழகு பேசாதே⋆
பெண்ணின் வருத்தம் அறியாத⋆
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு⋆ என்னை
வாட்டம் தணிய வீசீரே (1)

பால் ஆலிலையில் துயில் கொண்ட⋆
பரமன் வலைப் பட்டிருந்தேனை⋆
வேலால் துன்னம் பெய்தாற் போல்⋆
வேண்டிற்றெல்லாம் பேசாதே⋆
கோலால் நிரை மேய்த்தாயனாய்க்⋆
குடந்தைக் கிடந்த குடம் ஆடி⋆
நீலார் தண்ணந் துழாய் கொண்டு⋆ என்
நெறி மென் குழல் மேல் சூட்டீரே (2)

கஞ்சைக் காய்ந்த கரு வில்லி⋆
கடைக் கண் என்னும் சிறைக் கோலால்⋆
நெஞ்சூடுருவ வேவுண்டு⋆
நிலையும் தளர்ந்து நைவேனை⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்⋆
அவன் மார்பணிந்த வனமாலை⋆
வஞ்சியாதே தருமாகில்⋆
மார்பில் கொணர்ந்து புரட்டீரே (3)

www.prapatti.com

ஆரே உலகத்தாற்றுவார்⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும்⋆
காரேறுழக்க உழக்குண்டு⋆
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை⋆
ஆராவமுதம் அனையான் தன்⋆
அமுத வாயில் ஊறிய⋆
நீர் தான் கொணர்ந்து புலராமே⋆
பருக்கி இளைப்பை நீக்கிரே (4)

அழிலும் தொழிலும் உருக் காட்டான்⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்⋆
தழுவி முழுகிப் புகுந்தென்னைச்⋆
சுற்றிச் சுழன்று போகானால்⋆
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே⋆
நெடுமால் ஊதி வருகின்ற⋆
குழலின் தொளைவாய் நீர் கொன்டு⋆
குளிர முகத்துத் தடவீரே (5)

நடை ஒன்றில்லா உலகத்து⋆
நந்தகோபன் மகன் என்னும்⋆
கொடிய கடிய திருமாலால்⋆
குளப்புக் கூறு கொளப்பட்டு⋆
புடையும் பெயரகில்லேன் நான்⋆
போட்கன் மிதித்த அடிப்பாட்டில்⋆
பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள்⋆
போகா உயிர் என் உடம்பையே (6)

வெற்றிக் கருளக் கொடியான் தன்⋆
மீ மீதாடா உலகத்து⋆
வெற்ற வெறிதே பெற்ற தாய்⋆
வேம்பே ஆக வளர்த்தாளே⋆
குற்றம் அற்ற முலை தன்னைக்⋆
குமரன் கோலப் பணைத் தோளோடு⋆

www.prapatti.com

அற்ற குற்றம் அவை தீர⋆
அணைய அமுக்கிக் கட்டீரே (7)

உள்ளே உருகி நைவேனை⋆
உளளோ இலளோ என்னாத⋆
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்⋆
கோவர்த்தனனைக் கண்டக்கால்⋆
கொள்ளும் பயன் ஒன்றில்லாத⋆
கொங்கை தன்னைக் கிழங்கோடும்⋆
அள்ளிப் பறித்திட்டவன் மார்பில்
எறிந்து⋆ என் அழலை தீர்வேனே (8)

கொம்மை முலைகள் இடர் தீரக்⋆
கோவிந்தற்கோர் குற்றேவல்⋆
இம்மைப் பிறவி செய்யாதே⋆
இனிப் போய்ச் செய்யும் தவந்தான் என்⋆
செம்மை உடைய திருமார்பில்⋆
சேர்த்தானேலும் ஒரு ஞான்று⋆
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி⋆
விடை தான் தருமேல் மிக நன்றே (9)

‡அல்லல் விளைத்த பெருமானை⋆
ஆயர் பாடிக்கணி விளக்கை⋆
வில்லி புதுவை நகர் நம்பி⋆
விட்டுசித்தன் வியன் கோதை⋆
வில்லைத் தொலைத்த புருவத்தாள்⋆
வேட்கை உற்றுமிக விரும்பும்⋆
சொல்லைத் துதிக்க வல்லார்கள்⋆
துன்பக் கடலுள் துவளாரே (10)

‖ஆண்டாள் திருவடிகளே சரணம்‖

www.prapatti.com